DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No. 128/2021**

**prosecution witness: Pw 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | | Caste | : | |
| Fathers Name | : | | calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**Accused absent 317 petition filed and allowed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.C.No./20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிராஜ்தீன் | ஜாதி | : | |
| த/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**28.04.2023**

முதல் விசாரணை:

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் சானார்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வ ருகிறேன். கடந்த 15.07.2020-ம் தேதி 15.00 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம் மண்பம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி காவலர் 1778 திரு. மணிகண்டன், காவலர் 1108 திரு. சம்பத்குமார் ஆகிய பார்டிகள் சகிதம் வேதாளை கடற்கரை பகுதியில் ரோந்து சுற்றி கண்காணித்து வந்தோம்.

2. அப்போது கடற்கரை ஓரத்தில் நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க அவர் விருதுநகர் மாவட்டம் குள்ளூர் சந்தை அகதிகள் முகாமை சேர்ந்த ராமு மகன் மகேந்திரன் என தெரியவந்தது. மேலும், அவரை விசாரிக்க தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் போலீஸ் சாட்சிகளான காவலர் திரு. மணிகண்டன் மற்றும் சம்பத்குமார் ஆகியோர் முன்னிலையில் 15 மணி முதல் 16 மணி வரை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-4 ஆகும். பின்னர் மேற்படி மகேந்திரன், மண்டபம் வேதாளை கடற்கரையில் இருந்து சட்டவிரோதமாக தனது சொந்த நாடான இலங்கைக்கு கடவுச்சீட்டு இன்றி கடல் மூலமாக செல்வதற்காக வேதாளை கடற்கரையில் இருந்ததாகவும், அதற்கு

அவர் பயன்படுத்திய தன்னிடம் இருந்து ஆஜர் செய்த realme cellphone மற்றும் redmi cell phone பணம் ரூ.500/- ஆகியவற்றை 16 மணி முதல் 16.15 வரை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

3. பின்னர் நிலையம் வந்து மண்டபம் காவல் நிலைய குற்ற எண்.287/2020 பிரிவுகள் 3 r/w 12 (1)(a) passport Act படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். மேலும் வழக்கினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. புகார் மனு கொடுத்தது யார் என்றால் தகவலின் அடிப்படையில். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது எந்த அதிகாரி என்றால் நான் தான் பதிவு செய்தேன். ஆய்வாளரிடம் விசாரணையில் சொன்னதை தான் தற்போது சொல்கிறேன் என்றால் சரிதான். நான் மண்டபத்தில் 1 1/2 ஆண்டுகளான சார்பு ஆய்வாளராக பணியாற்றினேன்.

2. அன்றைய தினம் ரோந்து பணிக்கு 15 மணிக்கு சென்றோம். இருசக்கர வாகனத்தில் சென்றேன். காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் எவ்வளவு துாரம் இருந்தது என்றால் 6 கிமீ இருந்தது. எவ்வளவு நேரத்தில் போகலாம் என்றால் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். எதிரி சம்பவ இடத்தில் எந்த திசையை பார்த்து நின்றுகொண்டிருந்தார் என்றால் தெற்கு திசையை பார்த்து நின்றுகொண்டிருந்தார். எதிரி எங்களை பார்த்து ஓடவில்லை அங்கேயே தான் இருந்தார்.

3. பொதுவாக இலங்கைக்கு செல்வதற்காக எதிரி நின்றுகொண்டிருந்தால் எங்களை பார்த்த உடன் தப்பித்து ஓடுவதற்கு முயற்ச்சி செய்திருப்பார் என்றால் அவரிடம் பொருட்கள் இருந்ததால் ஓடுவதற்கு முயற்சி செய்யவில்லை. அவரிடம் என்ன பொருட்கள் இருந்தது என்றால் 2 செல்போன், பணம் ரூ.500/- இருந்தது. வேறு எந்த பொருளும் இருந்ததா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அவரிடம் எந்த ஒரு பையும் இல்லை என்றால் சரிதான்.

4. பொதுவாக ஊர் விட்டு ஊர் செல்வதென்றால் பையில் டிரஸ் மற்ற பொருட்கள் வைத்திருப்பது வழக்கம் என்றால் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக எந்த பொருட்களையும் பையில் வைத்திருக்கமாட்டார்கள். வெறும் 500 ரூபாய்யை வைத்துக்கொண்டு இலங்கை வரை செல்லமுடியாது என்றால் சரிதான் அதிகமாக பணம் வைத்திருந்தால் போலீஸ் சந்தேகப்படுவார்கள் என்பதால் இலங்கைக்கு போய்கூட பணம் வாங்கிகொள்ளலாம். ஆனால் அந்த இடத்தில் அவரிடம் இருந்தது 500 ரூபாய் தான் அதை வைத்து அவர் இலங்கைக்கு போக வாய்ப்பு இல்லை என்றால் ஏற்கனவே மனைவி, பிள்ளைகளை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருப்பதால் அங்கே போய் கொடுக்க வாய்ப்பு உள்ளது.

5. முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.07.2020, நேரம் 16.30 மணி என சொல்லியுள்ளேன் என்றால் வழக்கு பதிவு செய்த நேரம் தான் 16.30 மணி ஆகும். சம்பவ இடத்தில் இருந்து வேறு எந்த பொருளும், படகு எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன். கடற்கரை பகுதியில் தான் எதிரியை பிடித்தோம் என்றால் சரிதான். அந்த பகுதி எப்போதும் மக்கள் நெருக்கமான பகுதி என்றால் மதியம் 3 மணி என்பதால் மக்கள் அதிகமாக நடமாடுவதற்கு வாய்ப்பு இல்லை.

6. எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை, சம்பவ இடத்தில் எதிரியை பிடித்திருந்தால் தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்திருப்போம் என்றால் எதிரி சம்பவ இடத்தில் இருந்தார் பொது மக்கள் யாரும் சாட்சியாக முன்வரவில்லை. பொது மக்கள் அங்கு இருப்பதற்கு அதிகமாக வாய்ப்பு இருந்தும், எதிரியை நாங்கள் தனிச்சையாக காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தததால் தான் பொது மக்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் எங்கள் காவல் நிலையத்தில் ஆய்வாளர் யார் என்றால் திரு. சபரிநாதன் ஆவார். அன்று அவர் பணியில் இருந்தாரா என்றால் அயற்பணிக்கு சென்றிருந்தார். அவர் அன்றைய தினம் எத்தனை மணி வரை காவல் பணியில் இருந்தால் என்று எனக்கு தெரியுமா என்றால் வழக்கு பதிவு செய்யும் போது இருந்தார்.

7. வழக்கு பதிவு செய்யும் போது காவல் ஆய்வாளர் சபரிநாதன் பணியில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். அந்த நிலையில் காவல் ஆய்வாளர் சபரிநாதன் ஏன் புலன் விசாரணை அதிகாரியாக இல்லை என்றால் அயற்பணிக்கு சென்றுவிட்டார். காவலர் குறிப்பேட்டில் அவர் எத்தனை மணி வரை பணியில் இருந்தார் என்று தெளிவாக தெரியும் என்றால் சரிதான். அன்றைய தினம் அவர் 8 மணி வரை பணியில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் பொய் வழக்கு பதிவு செய்யமாட்டேன் என மறுத்ததால் தான் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அவர் வழக்கு பதிவு செய்ய மறுத்ததால் தான் தங்கச்சிமடம் காவல் நிலைய ஆய்வாளரை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்து வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல.

8. எதிரியிடமிருந்து கைப்பற்றிய செல்போனில் இருந்து அவர் யாரிடம் பேசினார், என்று எந்த விபரமும் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரி இலங்கைக்கு செல்ல முயற்சி செய்திருந்தால் யாரிடமாவது பேசி உதவி கேட்டு , அவர் மூலமாகதான் செல்வதற்கு முயற்சி செய்திருப்பார் என்றால் படகில் செல்வதற்கு மீனவர் யாரிடமாவது உதவி கேட்டிருப்பார். அது யார் என்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான் குறிப்பிட்டு அவர் யாரையும் சொல்லவில்லை.

9. எதிரி மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள அவரது உறவினரை பார்க்க வந்தவரை போன் போட்டு அழைத்து காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வாங்கி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல உறவினர் இருந்தால் முகாமில் இருந்து அவரது உறவினர் காவல்நிலையத்திற்கு பார்க்க வந்திருப்பார். எதிரியை நாங்கள் காவல் நிலைய பிணையில் விட்டுவிட்டோம் என்றால் சரிதான். பொதுவாக passport ACt படி வழக்கு பதிவு செய்தால் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதுதான் வழக்கம் என்றால் புலன் விசாரணை அதிகாரிதான் அதை சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவு செய்வார்.

10. மண்டபம் காவல் நிலையத்தில் எதிரி மீது எந்த முன்வழக்கும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். எதிரி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டில் அகதியாகத்தான் வாழ்ந்து வருகிறார் அவரது இரண்டு குழந்தைகளும் இங்கு தான் கல்வி பயின்று வருகிறார்கள், அவர் இலங்கைக்கு தப்பி செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதவரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் சபரிநாதனை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரியல்ல.

வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

போலீசார் விசாரணையில் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் இராமேஸ்வரம் காட்டுபிள்ளையார் கோவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் எதிரிகளை குறிப்பிட்டு புகார் எதுவும் அளிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

போலீசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

நான் இராமேஸ்வரம் அண்ணா நகரில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் என்னுடையது. அது அ.சா.ஆ.2 ஆகும். அந்த கையெழுத்தை நான் நகர் காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்காக போட்டுக்கொடுத்தேன். அதிலுள்ள விபரங்கள் எனக்கு

தெரியாது.   போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 10.01.2018-ம் தேதி 15.45 மணிக்கு நானும், சதீஸ்குமார் என்பவரும் வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், அங்கு வந்த இராமேஸ்வரம் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையிலும் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நானும், சதீஸ்குமார் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

அரசு தரப்பு மறுவிசாரணை:-

அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையிலும் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் குஞ்சார் வலசையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

மிரட்டியதாக போலீசார் விசாரணையிலும் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

சாட்சி **Crmp.2701/2022-**ன் படி ஏற்பட்ட உத்தரவுப்படி மீண்டும் வரவழைக்கப்பட்டு விசாரணை

செய்யப்படுகிறார் **:-**

அரசு தரப்பு மறுவிசாரணை **:-**

இந்த வழக்கின் எதிரிகள் மீது பிரிவு **82 Crpc** படி பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது அது சம்பந்தமாக **Crpc** பிரிவு **299-**ன் கீழ் எதிரிகள் இல்லாமல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.